©
GOVERNMENT OF TAMIL NADU
2015

[Regd. No. TN/CCN/467/2013-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 13] CHENNAI, WEDNESDAY, APRIL 1, 2015
Panguni 18, Jaya, Thiruvalluvar Aandu-2046

## Part VI—Section 2

**Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### CONTENTS

*Pages.*

COLLECTORS AND LOCAL AUTHORITIES

ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவண்ணாமலை மாவட்டம்.

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், பல்லாவரம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. டி. இளங்கோவன் என்பவருக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 204 (3)—ன் கீழ் அதிகாரம் அளித்தது தொடர்பான அறிவிக்கை. .. .. 108

NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

## COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை மாவட்டம்.**

**திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், பல்லாவரம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. டி. இளங்கோவன் என்பவருக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 204 (3)—ன் கீழ் அதிகாரம் அளித்தது தொடர்பான அறிவிக்கை.**

*[ந.க. எண் 20/2014/அ2.]*

**No. VI(2)/55/2015.**

என்உளத்தேர்வின்படி பல்லாவரம் ஊராட்சியின் மொத்தமுள்ள 06 ஊராட்சி மன்ற உறுப்பினர்களில் நான்கு உறுப்பினர்கள் பல்லாவரம் ஊராட்சியில் வீட்டுமனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கியது தொடர்பான பூசல்கள் காரணமாக ஊராட்சி மன்றத் தலைவருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு நிர்வாகத்திற்கு இன்று வரை ஒத்துழைப்பு தர மறுப்பதாக தெரிய வருகிறது. இந்நிலைத் தொடர்வதால் ஊராட்சி நிர்வாகம் ஸ்தம்பித்துவிடும் என்பதை கருத்தில் கொண்டும் ஊராட்சி நிர்வாக நலன் கருதியும் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 204(3)—ன்படி, பல்லாவரம் ஊராட்சி மன்றத் தலைவர்/ஊராட்சியின் நிர்வாக அலுவலருக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு ஊராட்சிப் பணிகளை மேற்கொள்ளவும் ஆறு மாதங்களுக்கு மிகாமல் ஊராட்சி மன்றக் கூட்டம் நடத்துவதற்கு விதிவிலக்கு அளித்து, ஊராட்சி நிதியினை கையாளும் அதிகாரம் வழங்கப்படுகிறது. இந்நேர்வில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்)ன், முன் அனுமதி பெற்று செலவினங்கள் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் கூடிய அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது.

1994—ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 262 (1)—ன்படி **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை,
2015 பிப்ரவரி 13.

**அ. ஞானசேகரன்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU